இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

"புனிதவாழ்வு என்பது ஒரு சிலருக்கு மட்டுமே உரிய சலுகை அல்ல, மாறாக அது திருமுழுக்கு பெற்ற ஒவ்வொருவரும் அன்புப் பணியில் தங்களை முழுமைப்படுத்திக் கொள்ளவும், கடவுள் மீதும் பிறர் மீதும் முழுமையான அன்பு காட்டவும் அழைக்கப்படும் ஒரு கொடையாகும்."

## மத்திய கிழக்கில் போர்நிறுத்தம்: திருத்தந்தை லியோ வரவேற்பு, அமைதிக்காக ஜெபிக்கவும் அழைப்பு.



கடந்த கால நினைவுகளையும், எதிர்காலத்தைப் பற்றிய தொலைநோக்குப் பார்வையையும் ஒன்றிணைக்கும் வகையில் உருவகப்படுத்தப்பட்டுள்ள “பிரான்சிஸின் அர்ஜென்டினா” (Francis’ Argentina) என்ற ஆவணப்படம், வத்திக்கான் திரைப்பட நூலகத்தில் அதிகாரப்பூர்வமாகத் திரையிடப்படவுள்ளது. அதன் பிறகு, மத்திய தரைக்கடல் வழியாக வரும் புலம்பெயர்ந்தோர் வந்து சேரும் முக்கிய இடமான தெற்கு இத்தாலியின் லம்பேடுசா (Lampedusa) தீவில் இது திரையிடப்படும்.

இத்தாலியின் வடபகுதியில் உள்ள ஆஸ்தி (Asti) நகரம், வத்திக்கான் நகரம் மற்றும் தெற்குப் பகுதியில் உள்ள லம்பேடுசா தீவு ஆகியவை புவியியல் ரீதியாகத் தொலைவில் இருந்தாலும், ஒரு பொதுவான நூலால் பிணைக்கப்பட்டுள்ளன. அதுதான் திருத்தந்தை பிரான்சிஸின் நினைவுகள், அவரது வேர்கள் மற்றும் நற்செய்தியின் ஒளியில் திருஅவையின் எதிர்காலத்தை நோக்கிய அவரது தொடர்ச்சியான அறிவுரைகள்.

“டெலிபேஸ்” (Telepace) கத்தோலிக்கத் தொலைக்காட்சி நிறுவனம், வத்திக்கான் செய்திகளுடன் (Vatican News) இணைந்து தயாரித்துள்ள இந்த ஆவணப்படம், அரிய வரலாற்றுப் பதிவுகள் மற்றும் சாட்சிகளின் வாக்குமூலங்கள் வழியாகத் திருத்தந்தை பிரான்சிஸின் பயணத்தைத் திரையில் கொண்டுவருகிறது.

### திருத்தந்தை பிரான்சிஸின் நினைவுகள்

இந்த ஆவணப்படத்தின் ஆலோசனைக் குழுவில் பணியாற்றிய ஓர்சோலா அப்பெண்டினோ என்பவர் கூறுகையில், "அவர் நம் அனைவர் மீதும் மிகுந்த அன்பு கொண்டிருந்தார். கடைசியாக 2024, டிசம்பர் 12 அன்று அவரைச் சந்தித்தபோது, தனது பூர்வீகப் பேச்சுவழக்கில் (Piedmontese) என்னை மிகவும் சத்தமாக ‘செரியா’ (cerea - வணக்கம்) என்று கூறி வரவேற்றார்" என நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார்.

இந்த ஆவணப்படம் லம்பேடுசா தீவில் உள்ள புனித ஜெர்லாந்து (St. Gerlando) பங்குத்தளத்தில் திரையிடப்படவுள்ளது. இது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தனது முதல் மேய்ப்புப்பணிப் பயணமாகச் சென்ற இடமாகும்.

### திருத்தந்தை லியோவின் வருகைக்காகக் காத்திருப்பு

லம்பேடுசா பங்குத்தந்தை கார்மெலோ ரிசோ கூறுகையில், "இந்தத் தீவு பிரான்சிஸை நினைவுகூர்கிறது, அதேவேளையில் வரவிருக்கும் திருத்தந்தை லியோவின் வருகைக்காகவும் (ஜூலை மாதம்) காத்திருக்கிறது. திருச்சபையின் நற்செய்திப் பணியை நாம் பார்க்கும் விதத்தை மாற்றியமைத்ததற்காக நாம் திருத்தந்தை பிரான்சிஸிற்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம். இந்த ஆவணப்படம், மற்றவர்களுக்கு நெருக்கமாய் இருக்கக் கற்றுக்கொடுத்த ஒரு திருத்தந்தையை நாம் அனைவரும் ஒன்றிணைந்து தழுவிக்கொள்வதோடு, அவர் வழங்கிய 'நம்பிக்கை மற்றும் வரவேற்பு' என்னும் செய்தியை மீண்டும் நினைவுகூர ஒரு நல்வாய்ப்பாகும்" என்றார்.

தமிழாகம் ஹெரால்டு

## பொது மறைக்கல்வி: "புனிதவாழ்வு ஒரு சிலருக்கு மட்டுமே உரிய சலுகை அல்ல" - திருத்தந்தை லியோ XIV



திருத்தந்தை லியோ XIV அவர்கள், 'லூமென் ஜென்சியம்' (திருஅவை பற்றிய கொள்கை விளக்கம்) என்ற இரண்டாம் வத்திக்கான் சங்க ஏட்டை அடிப்படையாகக் கொண்டு தனது மறைக்கல்வித் தொடரைத் தொடர்ந்தார். அப்போது, "புனிதவாழ்வு என்பது ஒரு சிலருக்கு மட்டுமே வழங்கப்பட்ட தனிச்சலுகை அல்ல; அது திருமுழுக்கு பெற்ற அனைவருக்கும் உரியது" என்று நினைவுபடுத்தினார்.

"புனிதவாழ்வு என்பது ஒரு சிலருக்கு மட்டுமே உரிய சலுகை அல்ல, மாறாக அது திருமுழுக்கு பெற்ற ஒவ்வொருவரும் அன்புப் பணியில் தங்களை முழுமைப்படுத்திக் கொள்ளவும், கடவுள் மீதும் பிறர் மீதும் முழுமையான அன்பு காட்டவும் அழைக்கப்படும் ஒரு கொடையாகும்."

புதன்கிழமை காலை வத்திக்கானில் நடைபெற்ற பொது மறைக்கல்வி உரையின் போது திருத்தந்தை லியோ இதனைத் தெரிவித்தார்.

### புனிதத்திற்கு அழைப்பு

திருஅவையின் ஐந்தாம் அதிகாரம் குறிப்பிடும் 'புனிதத்திற்கான பொதுவான அழைப்பு' குறித்து திருத்தந்தை விளக்கினார். ஒவ்வொரு கிறிஸ்தவரும் இறை அருளில் நிலைத்திருக்கவும், நற்பண்புகளைக் கடைப்பிடிக்கவும், கிறிஸ்துவை முன்மாதிரியாகக் கொண்டு வாழவும் அழைக்கப்படுகிறார்கள் என்று அவர் கூறினார்.

தொடக்ககாலத் திருஅவையைப் போலவே, புனிதத்தின் உன்னத நிலை 'மறைசாட்சியம்' (உயிரைத் தியாகம் செய்தல்) ஆகும். இது விசுவாசத்திற்கும் அன்பிற்கும் கொடுக்கப்படும் மிகச்சிறந்த சான்று. இன்றும் கூட, ஒரு விசுவாசி கிறிஸ்துவுக்காகத் தனது இரத்தத்தைச் சிந்தவும் தயாராக இருக்க வேண்டும் என்பதைத் திருத்தந்தை வலியுறுத்தினார்.

### புனித வாழ்வை வளர்க்கும் திவ்ய நற்கருணை

திருத்தந்தை லியோ தொடர்ந்து உரையாற்றுகையில்:

- அனைத்து திருவருட்சாதனங்களும், குறிப்பாக திவ்ய நற்கருணை, புனிதமான வாழ்விற்குத் தேவையான ஊட்டம் அளிப்பவை.
- இவை ஒவ்வொருவரையும் புனிதத்தின் அளவுகோலான கிறிஸ்துவுக்கு ஒப்பாக மாற்றுகின்றன.
- புனிதவாழ்வு என்பது கடவுள் நமக்குத் தரும் ஒரு பரிசு. அன்றாட வாழ்வில் அந்தப் பரிசை மகிழ்ச்சியோடு ஏற்று, இறைவனுக்குப் பதிலளிக்கும் போது அது வெளிப்படுகிறது.

தூய ஆறாம் பவுல் கூறியது போல, திருஅவை உண்மையானதாக இருக்க வேண்டுமெனில், திருமுழுக்கு பெற்ற அனைவரும் அதன் உண்மையான, வலுவான மற்றும் விசுவாசமிக்கப் பிள்ளைகளாக வாழ வேண்டும்.

### வாழ்வில் மனமாற்றம் தேவை

திருஅவை புனிதமானது என்று நாம் கூறும்போது, அது முழுமையானது என்று அர்த்தமல்ல. மாறாக, உலகத் துன்பங்களுக்கு மத்தியிலும், இறைவனின் ஆறுதலோடும் விண்ணகத்தை நோக்கிப் பயணம் செய்யும் போது, இந்த இறைக்கொடையை நாம் உறுதிப்படுத்த வேண்டும்.

திருஅவையில் உள்ள நம்மிடம் காணப்படும் பாவ நிலைகள், நாம் ஒவ்வொருவரும் தீவிரமான மனமாற்றத்திற்கு உள்ளாக வேண்டும் என்பதை உணர்த்துகின்றன. புனிதவாழ்வு என்பது ஏதோ ஒரு தார்மீகக் கடமை மட்டுமல்ல, அது கிறிஸ்தவ வாழ்வின் சாராம்சம்.

### துறவற வாழ்வின் விழுமியங்கள்

இறைவனுக்காகத் தங்களை அர்ப்பணித்த துறவிகள் கடைப்பிடிக்கும் மூன்று முக்கிய நெறிகளைப் பற்றி திருத்தந்தை சிறப்பித்துக் கூறினார்:

1. வறுமை (ஏழ்மை): இது இறை பராமரிப்பின் மீது முழு நம்பிக்கை வைப்பதைக் குறிக்கிறது. சுயநலத்திலிருந்து ஒருவரை விடுவிக்கிறது.
2. கீழ்ப்படிதல்: கிறிஸ்து பிதாவிற்குத் தம்மையே கையளித்ததைப் போல இது அமைகிறது. இது அதிகாரப் போக்கிலிருந்து ஒருவரை விடுவிக்கிறது.
3. கற்பு (தூய்மை): இறைவனுக்கும் திருஅவைக்கும் சேவை செய்யத் தூய இதயத்தைத் தருகிறது.

"இந்த மூன்று விழுமியங்களும் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் விலங்குகள் அல்ல, மாறாக அவை தூய ஆவியார் வழங்கும் விடுதலை அளிக்கும் கொடைகள்" என்று திருத்தந்தை சுட்டிக்காட்டினார்.

### துன்பங்கள் புனித வாழ்வின் பாதை

இறுதியாக, "கடவுள் மீட்க முடியாத மனித அனுபவம் என்று எதுவுமே இல்லை" என்று திருத்தந்தை கூறினார். நமது துன்பங்களைக் கூட கிறிஸ்துவின் சிலுவைப் பாடுகளோடு இணைத்து வாழும்போது, அதுவும் புனிதத்திற்கான ஒரு பாதையாக மாறுகிறது.

திருத்தந்தை லியோ XIV, இறைவார்த்தையின் தாயும், மகா தூயவருமான அன்னை மரியாள் நமது இந்தப் புனிதப் பயணத்தில் நம்மை எப்போதும் ஆதரித்துப் பாதுகாக்க வேண்டும் என்று வேண்டித் தனது உரையை நிறைவு செய்தார்.

தமிழாக்கம் ஹெரால்டு

## மலேசிய மறைப்பணி மாநாடு 2026-க்கான செபம் (MPC2026)

ஆண்டவராகிய இறைவா, தந்தை, மகன், தூய ஆவியாரின் ஐக்கிய வாழ்விற்கு எங்களை அழைத்து, உமது மக்களாக நாங்கள் இணைந்து பயணிக்க எம்மை அழைக்கின்றீர்.

2026-ஆம் ஆண்டு நடைபெறவுள்ள மலேசிய மறைப்பணி மாநாட்டிற்கு நாங்கள் எங்களை ஆயத்தப்படுத்தும் இவ்வேளையில், எங்களை வழிநடத்தியருளும். ஆழமாக செவிமடுக்கவும், உண்மையுடன் தேர்ந்து தெளியவும், நீர் எங்களை வழிநடத்தும் பாதையில் நம்பிக்கை கொள்ளவும் எங்களுக்குக் கற்றுத் தந்தருளும்.

நாங்கள் ஒன்றிணைந்து தேர்ந்து தெளிந்து கொண்டிருக்கும் நான்கு முக்கியத் தளங்களை உமது பாதத்தில் சமர்ப்பிக்கின்றோம்.

எங்கள் குடும்பங்களை ஆசீர்வதியும்; அவை அன்பு, விசுவாசம், மன்னிப்பு மற்றும் நம்பிக்கையின் இருப்பிடங்களாகத் திகழச் செய்யும். எங்கள் திருஅவையைப் புதுப்பியும்; நாங்கள் ஒன்றிப்பு, பங்கேற்பு மற்றும் நற்செய்தியின் மகிழ்ச்சியான சாட்சிகளாக வளர அருள்புரியும்.

படைப்பின் கூக்குரலுக்கு எங்கள் இதயங்களைத் திறந்தருளும்; நாங்கள் இந்த பூமியைப் பக்தி மரியாதையுடனும், பொறுப்புணர்வுடனும், நன்றியுணர்வுடனும் பராமரிக்கச் செய்யும்.

சமூகத்தில் எங்களை வழிநடத்தும்; நாங்கள் நீதியைத் தேடவும், அமைதியை மேம்படுத்தவும், ஏழைகள் மற்றும் நலிவுற்றோருடன் உடன் பயணிகளாய் நிற்கவும் எங்களுக்குத் துணைபுரியும்.

எங்கள் தேர்ந்து தெளிதலின் வழியாக உருவாகும் மறைப்பணிப் பாதைகள், எங்கள் சமூகங்களை விசுவாசத்தில் வளப்படுத்தவும் வலிமைப்படுத்தவும் செய்வீராக.

இறைவார்த்தையைத் தியானித்து, விசுவாசத்தில் பயணித்த திரு அவையின் தாயான மரியன்னையோடு இணைந்து, நம்பிக்கையில் ஒன்றாகப் பயணிக்க எங்களுக்குக் கற்றுத் தந்தருளும். நாங்கள் கிறிஸ்துவில் வேரூன்றி இருக்கவும், ஒருவருக்கு ஒருவர் செவிமடுக்கவும், உமது தூய ஆவியாரின் செயல்பாடுகளுக்கு எங்களை முழுமையாகக் கையளிக்கவும் செய்தருளும். இந்த மாநாடு, நாங்கள் நேசிக்கும் இத்திருநாட்டில் பணியாற்றும் மலேசியாவின் ஒரே கத்தோலிக்கத் திருச்சபையாக இன்னும் உண்மையுடன் வாழ எங்களுக்கு உதவுவதாக. எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

மொழியாக்கம் - ஹெரால்டு

## தேவனின் அன்பு நெறி

இயேசுவே இரட்சகா உந்தன்
நாமம் எந்தன் ஆறுதல்
ஆம் என் அன்பு இறைவா
அனைத்திலும் நீரே எந்தன் ஆறுதல்

வழி தவறி நான் திரிந்தேன்
எந்தன் வழியாய் நீ வந்தாய்
உலகப் போக்கில் நான் அலைந்தேன்
எந்தன் ஒளியாய் துணை நின்றுக் காத்தாய்

புறம் பேசி நான் மகிழ்தேன்
உண்மையின் பாதைக்கு எனை அழைத்தாய்
வஞ்சக உணர்வை நான் வளர்த்தேன்
அன்பின் ஆழத்தை எனக்கு உணர்த்தினாய்

அயலானை கண்டும் காணாது இருந்தேன்
பிறரன்பை என் மனதில் ஊக்குவித்தாய்
எளியோரின் தேவையை உணராதிருந்தேன்
அதை உணர என் கண்களைத் திறந்தாய்

தனித்திருப்போரின் தனிமையை புறக்கணித்தேன்
அதன் வேதனையை என்னில் உணரச்செய்தாய்
முதியோரின் உணர்வை மதியாதிருந்தேன்
அவர்களின் மாண்பை என்னில் புரியச் செய்தாய்

உம் அன்பு நெறியை எனக்குக் கற்பித்த தேவனே
என் பாவத்திற்காய் நீ கழுவாய் ஆனாய்
என் அத்துனை பாவக் கறைகளையும்
சிலுவை மரத்தில் உயிர்துறந்து சுத்திகரித்தாய்

தந்தையின் சித்தத்தை முழுமையாய் நிறைவேற்றி
அவரின் ஆசிரோடு மூன்றாம் நாள் உயிர்தெழுந்தாய்
வான்படைகளின் ஆர்பரிப்போடு விண்ணகம் சென்றாய்
எல்லாம் வல்ல தந்தையின் வலப்பக்கம் அமர்ந்தாய்

முழுத் தெளிவுப் பெற்று விழிப்புண்வு பெற்ற நான்
உயிர்தெழுந்த நாதனை உயர்த்திப் பாட வந்தேன்
இறை வல்லமையும் இறை ஞானமுமான இயேசுவை
அல்லேலுயா புகழ் பாடி நெஞ்சார மகிழ்ந்தேன்.

அன்புடன் குளோரியா மெத்யூஸ், ஈப்போ

## புனித சூசையப்பர் தேவாலயம் பத்து காஜாவில் உறுதபூசுதல் அருட்சாதனம்

கடந்த மார்ச் மாதம் 22-ஆம் நாளன்று, பத்து காஜாவில் அமைந்துள்ள புனித சூசையப்பர் தேவாலயத்தில், சுமார் 7 மறைக்கல்வி மாணவர்களுக்கு பினாங்கு மறைமாவட்ட ஆயர், கார்டினல் செபாஸ்டியன் பிரான்சிஸ் அவர்களால் உறுதிபூசுதல் அருட்சாதனம் வழங்கப்பட்டது. இவ்விழா, தவக்காலத்தில் மனம்திரும்பும் தன்மை மற்றும் நம்பிக்கையை உறுதிப்படுத்தலின் உணர்வை இணைக்கும் ஓர் விழாவாக நடந்தேறியது.

இத்திருப்பலியில் மறையுரை நிகழ்த்திய ஆயர் அவர்கள், பரிசுத்த ஆவியானவரால் நாம் எவ்வகையில் பெலப்படுத்தப்படுகிறோம் மற்றும் அதன் முக்கியத்துவத்தையும் விளக்கினார். குறிப்பாக இன்றைய மாறிவரும் உலகச் சூழலில், நாம் அனைவரும் விசுவாசத்தில் உறுதியாகப்பிணைக்கப்பட்டிருக்கவும் மற்றும் அன்றாட வாழ்வில் கிறிஸ்துவின் உண்மை சாட்சிகளாக வாழவும் அவர்களுக்கு ஊக்கமளித்தார். மேலும், உறுதிபூசுதல் என்பது விசுவாசப்பயணத்தின் முடிவல்ல மாறாக அது கடவுளின் இணைப்பிலும் மற்றும் அர்பணிப்பிலும் வாழும் ஓர் உறவின் தொடக்கம் எனவும் விளக்கினார்.

தொடர்ந்து பங்குத்தந்தை அருட்பணியாளர் பிரான்சிஸ் பேசுகையில், தவக்காலத்தில் மட்டும் தியாகம் என்றில்லாமல் அவை நம் உள்ளத்தில் ஆழ்ந்த நம்பிக்கையின் மறுமலர்ச்சியாக இருத்தல் அவசியம் என நினைவூட்டினார். மேலும் அவர், இறைவனின் கருணை நம்மிடையே நிலவுவதை உறுதியாக விசுவாசிக்க வேண்டும் என்பதையும் அவர் விளக்கினார்.

இறுதியாக தமது உரையில் இத்திருப்பலியில் கலந்து சிறப்பித்த மாணவர்களின் குடும்பங்கள், பங்கு மக்கள் மற்றும் இத்திருப்பலி சிறப்பாக நடைபெற உதவின அனைவருக்கும் முக்கியமாக மறைக்கல்வி பொருப்பாளரான திருமதி செலினா அவர்களுக்கும் நன்றியை தெரிவித்தார். மாணவர்களின் உள்ளங்களில் புதிய நம்பிக்கையை ஊட்டி இத்திருப்பலி சிறப்பாக நிறைவடைந்தது.

செல்வி அந்தோனி



## திருப்பலிப் பாடல்கள்: புதிய ‘வருகைப் பாடல்கள்’ இயற்ற அழைப்பு

கோலாலம்பூர்: கோலாலம்பூர் மாமறைமாவட்ட வழிபாட்டுக்குழுவின் (KLALC) இசைப் பிரிவு, புதிய ‘வருகைப் பாடல்களை’ (Entrance Hymns) இயற்றுவதற்கு இசையமைப்பாளர்கள், கலைஞர்கள் மற்றும் பங்குத் திருப்பாடல் குழுவினருக்கு அழைப்பு விடுத்துள்ளது.

திருப்பலியின் மாண்பையும், அழகையும், அதன் செப உணர்வையும் வெளிப்படுத்தும் வகையிலான வழிபாட்டுப் பாடல்களை உருவாக்குவதே இந்த முயற்சியின் முக்கிய நோக்கமாகும். திருப்பலியின் தொடக்கத்தில், இறைமக்கள் அனைவரும் ஒரே குரலில் இறைவனைப் புகழ்ந்து பாடி, அந்தப் புனிதமான வழிபாட்டைத் தொடங்குவதில் 'வருகைப் பாடல்' மிக முக்கியப் பங்கு வகிக்கிறது.

இந்தத் திட்டம் குறித்து விளக்கம் அளிப்பதற்காக, கடந்த மார்ச் 10-ஆம் தேதி ஒரு இணையவழி (Online) விளக்கக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பாடல்கள் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கான வழிகாட்டிகள் வழங்கப்பட்டன. குறிப்பாக:

* பாடல் வரிகள் விவிலிய மற்றும் இறையியல் (Theological) அடிப்படையில் இருக்க வேண்டும்.
* மக்கள் அனைவரும் இணைந்து பாடும் வகையில் எளிமையாக இருக்க வேண்டும்.
* திருப்பலியின் தொடக்க பவணிக்கு ஏற்றதாக இருக்க வேண்டும். அன்று கலந்துகொள்ள முடியாதவர்கள், இக்கூட்டத்தின் பதிவை (Recording) இணையதளத்தில் பார்த்து விவரங்களைத் தெரிந்துகொள்ளலாம்.

திரு அவையின் இசைப்பணியில் ஆர்வமுள்ள தனிநபர்கள் அல்லது குழுக்கள் இதில் பங்கேற்கலாம். சொந்தமாக உருவாக்கப்பட்ட, செப உணர்வு நிறைந்த, விவிலிய




வசனங்களை அடிப்படையாகக் கொண்ட பாடல்களைச் சமர்ப்பிக்க ஊக்கப்படுத்தப்படுகிறார்கள்.

நமது உள்ளூர் கலைஞர்களின் படைப்பாற்றலை வளர்ப்பதோடு, நமது பங்குத்தளங்களில் பயன்படுத்த புதிய வழிபாட்டுப் பாடல்களை உருவாக்குவதே மாமறைமாவட்டத்தின் விருப்பமாகும். இது விசுவாசிகளின் செப வாழ்வை ஆழப்படுத்தவும், நற்கருணைப் பெருவிழாவைச் சிறப்பாகக் கொண்டாடவும் உதவும்.

முக்கிய விவரங்கள்:

* பாடல்களைச் சமர்ப்பிக்கக் கடைசி நாள்: ஜுன் 30, 2026.
* தொடர்புக்கு: liturgy@archkl.org என்ற மின்னஞ்சல் முகவரியைத் தொடர்பு கொள்ளவும்.
* விளக்கக் காணொளியைப் பார்க்க: https://tinyurl.com/EntHymn என்ற இணையதளத்தைப் பார்வையிடவும்.

## பாஸ்கா காலம் 3-ஆம் ஞாயிறு - 19-4-2026

**முதல் வாசகம் திப 2:14, 22-33; 2-ம் வாசகம். 1பேதுரு 1:17-21; நற்செய்தி; லூக்கா 24:13-35**

### சாட்சிய வாழ்வு நமது வாழ்வு!

இன்று நாம் பாஸ்காகாலத்தின் மூன்றாம் ஞாயிரில் பயணிக்கிறோம். இன்றைய முதல் வாசகம் திருத்தூதர் பேதுரு எருசலேம் நகரின் சாலமோன் மண்டபத்தில் ஆற்றிய உரையின் ஒரு பகுதியாக இருக்கிறது. எருசலேம் ஆலயத்திற்கு வழிபாட்டுக்குச் செல்கின்ற பேதுருவும் யோவானும், கால் ஊனமுற்றிருந்த ஒருவருக்கு நலம் தந்து நற்செயல் செய்கின்றனர். இயேசுவின் பெயரால் அவர்கள் நலம் தருகின்றனர். இயேசுவின் பெயரே அவருக்கு நலம் தந்தது என்று உற்சாகமாக அறிவிக்கிறார் பேதுரு.

இரண்டாம் வாசகத்தில் இயேசுவை அறிதல் பற்றிப் பேசுகின்ற யோவான், அறிதல் என்பது அன்பு செய்தலிலும், அன்பு செய்தல் என்பது கட்டளைகளைக் கடைப்பிடித்தலிலும் நிறைவு பெறுகிறது என எடுத்துரைக்கிறார்.

நற்செய்தியில் இயேசு எம்மாவுக்குச் சென்றுகொண்டிருந்த இரு சீடர்களைச் சந்திக்கின்றார். இயேசு மூன்று படிகளில் அவர்களுடைய அச்சத்தைக் களைகின்றார்: (அ) அவர்களோடு உரையாடுகின்றார். கேள்விகள் கேட்டு அவர்களின் சந்தேகத்தைப் போக்க விழைகின்றார். (ஆ) அவர்களோடு உண்கின்றார். இயேசு மீன் உண்ணும் நிகழ்வு அவர்களுக்கு இயேசுவின் உயிர்ப்பின் சான்றாக இருப்பதோடு, இயேசு உடலோடு உயிர்த்தெழுந்தார் என்பதை அடிக்கோடிட்டுக் காட்டுவதாக இருக்கிறது. மற்றும் (இ) மறைநூலை விளக்குகின்றார். திருச்சட்டம், இறைவாக்கு, மற்றும் திருப்பாடல்கள் நூல்களில் தன்னைப் பற்றி எழுதியிருப்பதைச் சுட்டிக்காட்டுகின்ற இயேசு, மறைநூலின் படி அவர்கள் பெற்ற அனைத்துக்கும், 'நீங்கள் சாட்சிகள்' என மொழிகின்றார்.

### நமக்கான பாடம் என்ன?

1. இயேசு நம்மை விட்டுப் போகவில்லை – நம்முடைய துயரங்களிலும் சந்தேகங்களிலும் கூட அவர் நம்மோடு நடக்கிறார். நாம் உணரவில்லை என்றாலும் அவர் அருகிலேயே இருக்கிறார்.
2. மறைநூலும் திருப்பலியும் நம்மை விழிப்புணர்விற்கு அழைக்கின்றன – சீடர்கள் மறைநூல் விளக்கத்திலும் அப்பம் பிட்பதிலும் இயேசுவை அறிந்தது போல, நாமும் இறைவார்த்தை மற்றும் திருப்பலியின் வழியாகவும், கிறிஸ்தவ சமூகத்திலும் அவரைச் சந்திப்பதிலும் அவரில் முதிர்ச்சி அடைவதிலும் கவனம் செலுத்த வேண்டும்.
3. “அவர் பேசும்போது நம் இதயம் எரியவில்லையா?” என்று சீடர்கள் கேட்டார்கள். நம் இதயமும் இறைவார்த்தையால் நாள்தோறும் பற்றி எரிய வேண்டும்.

இறைவார்த்தையைக் கேட்டும், வாசித்தும், அதன்படி நாம் நடப்பதன் வழியாக அவருடைய முகத்தின் ஒளி நம்மேல் படுகிறது. நாம் தெளிவுப் பெற்ற சீடர்களாக சாட்சியவாழ்வு வாழ அழைக்கப்படுகிறோம்.

ஆவி. டேவிட்.குளுவாங்

**பங்குச் செய்திகளை அனுப்ப அழைக்கிறோம்**

உங்கள் பங்குகளில் நடைப்பெற்ற சமீபத்திய நிகழ்வுகளைக் குறித்து செய்திகள் புகைப்படங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் படைப்புகளை tamil@herald.com.my என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். திரு அவையின் மக்களின் வாழ்வையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்த உதவியமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.